(01.07.2025)

MC No.11/2024

PW–1 குருவம்மாள்

(மனுதாரர்,எதிர்மனுதாரர் ஆஜர். எதிர் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை. )

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் வீட்டில் தான் உள்ளேன். என்னுடன் வீட்டில் அப்பா, அம்மா, தம்பி ஆகியோர்கள் இருக்கிறார்கள். என்ன அப்பா விவசாயம் செய்து வருகிறார். எனது தம்பி சிப்கோவில் வேலை பார்கிறார். எனது தம்பிக்கு திருமணம் ஆகவில்லை. எனது பொன் காளீஸ்ஸ்ரீ தற்போது என்ன வயது ஆகிறது என்றால் 12 வயதாகிறது. 7 ம்வகுப்பு அரசு கள்ளர் மேல் நிலை பள்ளி, கப்பலுாரில் படிக்கிறாள். எனது மகன் எஸ்ரான்சாமுவேல் என்பவர் அதே பள்ளி 3 ம் வகுப்பு படிக்கிறார்.அந்த பள்ளியில் கட்டணங்கள் எதுவும் செலுத்த தேவையில்லை என்றால் ஆம். ஆனால் நோட்ஸ், புத்தகம் மற்றவை வாங்கவேண்டும். அதே போல் சீருடையும் பள்ளியிலேயே இலவசமாக வழங்குவார்கள். எனது அப்பாவுக்கு விவசாயத்தில் வரும் வருமானத்தை வைத்தும், எனது தம்பி வேலை செய்து கிடைக்கும் சம்பளத்தை வைத்தும் எங்கள் குடும்பத்தை நடத்தி வருகிறோம் என்று சொன்னால் சரிதான். நாங்கள் குடியிருக்கும் வீடு சொந்த வீடு என்றால் அது எனது அப்பாவிற்கு சொந்தமானது ஆகும். எனக்கும், எனது கணவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு 2019 ல் சிவகங்கை மாவட்ட குடும்ப நல நீதிமன்றத்தில் எனது கணவர் HMOP No.193/2019 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான்.மேற்படி வழக்கில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜரனேன். அந்த வழக்கை சிவகங்கையிலிருந்து மதுரைக்கு மாற்றக்கோரி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உயர் நீதிமன்றமானது அந்த மனுவின் மீது உத்தரவிட்டு எனது கணவர் தொடுத்த மேற்கண்ட வழக்கானது மதுரை சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதலாகி HMOP No.179/2020 என்ற வழக்காக மாறிவிட்டது என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கிலும் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜாராகியுள்ளேன். அந்த வழக்கானது எனக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக்கப்பட்டு தீர்ப்பு வழங்கபட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நீதிமன்றத்தின் உத்தரவு நிலுவையில் உள்ள போது நான் எனது கணவருடன் ஜீவனாம்சம் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் எனது கணவர் தொடுத்த வழக்கை நீக்கறவு செய்ய எவ்வித மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும், எனது கணவரும் சேர்ந்து வாழ்ந்த போது எனது கணவருக்கு கழுத்தில் கட்டி இருந்தது என்றால் சேர்ந்து வாழ்ந்த போது இல்லை ஆனால் சிவங்கையில் வழக்கு நடக்கும் போது அவருக்கு இருந்தது. அது போல் எனது கணவருக்கு காசநோய் பாதிப்பு இருந்து அதற்கு அவர் மருத்துவ சிகிச்சை எடுத்து வந்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும்,

எனது கணவரும் சேர்ந்து வாழ்ந்த போது எனது கணவர் கட்டிட வேலைக்கு செல்வார். மாதத்திற்கு எத்தனை நாட்கள் என் கணவர் வேலைக்கு செல்வார் என்று கேட்டால் ஞாயிற்று கிழமை தவிர மற்ற எல்லா நாட்களும் வேலைக்கு செல்வார். அவருக்கு ஒருநாள் சம்பளம் ரூ.500 முதல் 600 வரை சம்பளம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பளம்பற்றி அவர் என்னிடம் எதுவும் சொல்வது இல்லை. நான் என் கணவருடன் சேர்ந்து வாழும் சமயத்தில் நெடுமரம் ஊரில் எங்கள் வீட்டில் எனது மாமியார், சின்ன மாமியார் மற்றும் எனது கணவர், நான் எனது குழந்தைகள் ஓரே வீட்டில் வாழ்ந்து வந்தோம் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு நாங்கள் அந்த வீட்டில் இருக்கும்போது சண்டைசச்சரவுகள் இருந்ததா என்று கேட்டால் சம்பளம் கேட்டால் சண்டை போடுவார். எனது கணவர் என்னுடன் நெடுமரத்தில் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்று சொன்னால் கூட்டுக்குடும்பத்தில் எனக்கு பிரச்சனைகள் ஏற்பட்டால் எனது கணவர் என்னவென்று கேட்கமாட்டார். பிரச்சனை உள்ளது.ஆனால் தனிகுடுத்தனம் சென்றால் சேர்ந்து வாழ தயாராக உள்ளேன். எனது கணவரின் அம்மா, அக்கா ஆகியோருக்கு 70 வயதிற்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். அவர்கள் இருவருக்கும் ஆதரவாக எனது கணவரை தவிர வேறு யாரும் இல்லை என்று சொன்னால் சரிதான். எனது கணவரின் வருமானத்தில் தான் மேற்படி இருவரும் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்களும்வேலை பார்க்கிறார்கள். எனது கணவருக்கு நிரந்தர வேலை கிடையாது என்று சொன்னால் சரிதான். நான் 2017 வருடத்திலிருந்து என் கணவருடன் சேர்ந்து வாழவில்லை, மேலும் தனிக்குடுத்தனம் வேண்டுமென்று சொல்லி வீட்டை விட்டு வெளியே வந்துவிட்டதாலும், நான் ஜீவனாம்சம் கோருவதற்கு உரிமை இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.